சுடர் ஒளி

THE SUDAR OLI

27.08.2020 வியாழக்கிழமை

சீருடை வவுச்சருக்கு கால எல்லை நீடிப்பு

கொழும்பு, ஓக. 27
அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் முதலாம் தர மாணவர்களுக்கு இந்த வருடத்துக் காக வழங்கப்பட்ட 2

தனிமைப்படுத்தலில்

வீட்டிலிருந்த கர்ப்பிணிக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 27
வீட்டில் சுய தனிமைப்படுத் தலில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக் குள்ளாகியுள்ளமை கண்ட றியப்பட்டுள்ளது.
அவர் சிலாபம், ஆராச் சிக்கட்டுவ பகுதி 2

உண்மை கசக்கும்! கூட்டமைப்பும் மௌனம்

விக்னேஸ்வரன் கூட்டணி அறிக்கை

கொழும்பு, ஓக. 27
தமிழினத்தின் அடையாளங்களை அழித்து, பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி பௌத்த, சிங்கள சித்தாந்தத்தை நிறுவுவதற்கு முயற்சித்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கு, தமிழர்களும் தமிழும் அதன் பூர்வீகமும், தொன்மையானது என்ற உண்மையைக் கூறுகின்றபோது அது கசக்கவே செய்யும்.

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்ட ணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார். 9ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப நாளன்று சபாநாயகருக்கான கட்சித்தலைவர்கள் வாழ்த்துரையின்போது தமிழ் மக்கள் பூர்வீக குடிகள், தமிழ் மொழி தொன்மையானது என்ற உண் 2

6 புழுங்குகிறது நாடு! லீற்றர் தண்ணீர் தினமும் குடியுங்கள்

கொழும்பு, ஓக. 27
இலங்கை முழுவதும் கடும் வெப்பமான காலநிலை நிலவுகின்றது என்று வளி மண்டலவியல் திணைக்க ளம் அறிவித்துள்ளது.
இந்த நிலையில் நாளாந்தம் சுமார் 6 2

தமிழருக்கு தீர்வு வழங்க 2/3 ஐ பயன்படுத்துங்கள்!

நாடாளுமன்றில் சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஓக. 27
ஒரே கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி, பிரதமருடன் மூன் றில் இரண்டு பெரும்பான்மையுடனான அரசு தற்போது ஆட்சியைப் பிடித்திருக்கின்றது. தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்." இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். 2

நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களாக 26 பேர்

கொழும்பு, ஓக. 27
26 நாடாளுமன்ற உறுப்பி னர்களைக் கொண்ட நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பி னர்களின் பெயர் களை சபாநாயகர் 2

திருமணம் இனி 18 வயதுக்கு மேல்!

நாடாளுமன்றில் யோசனை முன்வைப்பு

கொழும்பு, ஓக. 27
இலங்கையில் திருமணத்துக் கான ஆகக்குறைந்த வயது எல்லை 18ஆக இருப்பதை உறுதிப்படுத் தும் தனிஆள் யோசனை நாடா ளுமன்றில் முன்வைக்கப்பட்டுள் ளது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் மாத்தளை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார இந்த யோச னையை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் 2

அரசுடன் இணையுங்கள்

கணக்கறிக்கை சமர்ப்பித்து நிதியமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 27
'நல்ல சுபீட்சத்தின் நோக்கு' என்கின்ற வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு இந்த அரசுடன் ஒன்றிணையுமாறு பிரத மரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத் துள்ளார். இடைக்கால கணக்க றிக்கையை நாடாளுமன்றில் இன்று வியாழக்கிழமை சமர்ப்பித்து உரையாற் றும்போதே அவர் மேற் 2A

எனது அனுமதியின்றி விசாரிக்க முடியாது!

சபாநாயகர் சபையில் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 27
தமது அனுமதியின்றி கோப் குழுவின் தலை வரை அல்லது உறுப்பினர்களை ஜனாதி பதி விசாரணை ஆணைக்குழுவுக்கு 2A



புதினம் தெரியுமோ

இந்தமுறை தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் ஏகத் துக்கும் பரபரப்பைக் கிளப்பி விட்டிருக்கிறது. வழக்கமாக ஒருமுகப்பட்ட வகையில், 'இனிதே நிறைவுற்றது' என்ற பாணி யில் நடைபெறும் கூட்டம் இம் முறை ,இரு தரப்பாக 'வாரி'க் கட்டிக் கொண்டு களமுறங்கியிருப்பதே இந்தப் பரபரப்புக்கு காரணம். கூட்ட நிகழ்ச்சி நிரலில், தேசியப் பட்டியல் நியமன விவகாரத்துக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. வெளிப்பூச்சுக்கு அதில் தேசியப்பட்டியல் நியமன 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

தமிழருக்கு தீர்வு...

நாடாளுமன்றத்தில் இன்று முற்பகல் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஒற்றையாட்சி முறைமையில் தமிழர்கள் அழிக்கப்பட்டது தான் வரலாறு. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு தமிழ் மக்களுடைய நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கூடிய வகையில் அரசமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்று இந்தத் தீவில் அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
இந்தத் தீவில் தமிழர்கள் தனி நாடாக தனி இராஜ்ஜியமாக தமிழ் மன்னர்களுடைய ஆட்சியில்தான் வாழ்ந்து வந்தார்கள். 1500 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு வெளிநாட்டவர்களின் வருகைக்குப் பின்னர்தான் 1815இல் தமிழர்களுடைய இராஜ்ஜியமும் சிங்களவர்களுடைய இராஜ்ஜியமும் ஒன்றாக்கப்பட்டு சிலோனாக மாறியது. அன்றிலிருந்து தமிழர்கள் இந்தத் தீவில் சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டார்கள்.
தமிழர்களை சிங்கள ஆட்சியாளர்கள் அடக்கி ஆள நினைப்பதும் தமிழர்கள் அதற்கு எதிராகப் போராடுவதும் வரலாறு.
இந்தத் தீவில் தமிழர்கள்தான் பூர்வீகக் குடிகள். அதற்கு வரலாற்று ஆவணங்களும் உள்ளன. நாங்கள் சிங்கள மக்களை ஆட்சி புரிய நினைக்கவில்லை.
இங்கு தமிழர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மயமாக்கப்படுவதும், தமிழர்களுடைய கலாசாரங்கள் அழிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயப்படுத்தப்படுவதும் இந்த ஒற்றையாட்சி முறைமையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.
ஒற்றையாட்சி முறைமையை வலுப்படுத்துவதற்காகவே மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள் என்று ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் கூறியிருந்தார். அதே வேளை, பிரதமர் இரண்டு தினங்களுக்கு முன்னர் தனிநபருக்காக அன்றி சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு மாற்றம் ஒன்று நடைபெற வேண்டும் என்று கூறியிருந்தார். ஒரு மையத்திலிருந்து பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவை நாடு பூராகவும் நடைமுறைப்படுத்துவதுதான் ஒற்றையாட்சி முறைமை.
ஒற்றையாட்சி முறைமையில் தமிழர்கள் அழிக்கப்பட்டது தான் வரலாறு. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு தமிழ் மக்களுடைய நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கூடிய வகையில் அரசமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்று நாட்டினுடைய ஜனாதிபதியையும் பிரதமரையும் இந்த அரசின் கட்சித் தலைவர்களையும் அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் குறிப்பாக சிங்கள மக்களையும் இந்தத் தீவில் அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
இந்த உலகத்தில் பல நாடுகள், பல மொழிகள் பேசுகின்ற மக்கள் சமமாக வாழக்கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளே அபிவிருத்தியடைந்த நாடுகளாக இருக்கின்றன" என்றார். (த22)

6 லீற்றர் தண்ணீர்...

லீற்றர் நீர் பருகுமாறு சிறுநீரக நோய் தொடர்பான உள்ளூர் பரிசோதனை குழு உறுப்பினரான பேராசிரியர் ஜயசுமன சகலரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.
போதுமான அளவு தண்ணீர் பருகவில்லை என்றால் சிறுநீரகத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் அதற்கு மேலதிகமாக சருமத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.
முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையான காலப்பகுதியில் முடிந்தளவு ஓய்வில் இருக்குமாறும் பிற்பகல் வேளைகளில் பயணங்கள் மேற்கொள்ளும்போது குடை அல்லது தலைக்கவசம் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இயன்றளவுக்கு இளநீர் மற்றும் நீர் சத்துக்கள் அதிகம் உள்ள பழங்கள் மற்றும் மரக்கறிகளை உட்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

உண்மை கசக்கும்!...

மையை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் வெளிப்படுத்தியிருந்தார். அதற்கே தென்னிலங்கை கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.
இது பற்றி ஆனந்தன் விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:
தமிழ் மொழியானது உலகத்தில் உள்ள மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழி பழம்பெரும் மொழி என்பதற்கு ஆயிரமாயிரம் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை மகாவம்சம், சூலவம்சம் போன்ற வரலாற்று நூல்களை பயன்படுத்தி முழுமையான திரிவுபடுத்தல்களை பேரினவாதச் சிங்களவர்கள் மேற்கொண்டுள்ளனர். தற்போதும்கூட, தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு கிழக்கின் வரலாற்றை மாற்றுவதற்கான திட்டமிடல்களே முன்னெடுக்கப்படுகின்றன. தமிழர்களை வந்தேறு குடிகளாக சித்தரித்து இலங்கையை முழுமையான சிங்கள, பௌத்த நாடாக அறிவிப்பதே பேரனவாதிகளின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே, கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி அதற்கு முழுமையான ஆதாரமாக அமைகின்றது.
அதேவேளையில், பொதுத்தேர்தல் நிறைவடைந்தவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை தேவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்தது. ஆனால், தமிழரின் இருப்பு தொடர்பான கூற்றால் தனி நபரை இலக்கு வைத்து தென்னிலங்கை தரப்புக்கள் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கின்ற நிலையில் மௌனமாக இருந்து கொண்டிருக்கின்றது. இதன்மூலம் ஒற்றுமைக்கான அழைப்பின் பின்னணி சுயலாப அரசியல் என்பதும், தமிழினத்தின் இருப்பை அழிக்கும் வரலாற்று தொன்மை மாற்றப்படுவதில் கரிசனையே இல்லை என்பதும் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது. என்றுள்ளது. (த18,110)

புதினம் தெரியுமோ?

விவகாரம் என்று குறிப்பிட்டிருந்தாலும், இந்த விடயம் முழுக்க முழுக்க கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கத்தை மையமாகக் கொண்டே விவாதிக்கப்படப் போகின்றது.
கட்சியின் தலைவருக்கே தெரியாமல் தன்னிச்சையாக செயலாளர் எப்படி அந்த நியமனத்தை வழங்கலாம் என்று பல தரப்புகளும் பாய்ந்து துரைராஜசிங்கத்தைக் குதறப் போகின்றன. அதேநேரம் அவர் பக்கமாகவும் சிலர் நிற்கவே செய்வார்கள். இருப்பினும் தனக்கு எதிராக வரும் விமர்சனங்களை எதிர்த்து நின்று மறுத்தான் கொடுக்குமளவுக்கு துரைராஜசிங்கம் , கெத்தானவர் இல்லை. மாவையர் லேசாக உறுமினாலே பம்மக் கூடியவர். எனவே அவர் அந்த மத்திய குழுக் கூட்டத்தில் பரிதாபமாக இரு தரப்புகளுக்கு நடுவில் நின்று சின்னாபின்னப்படாமல், முதலிலேயே தன்னுடைய பதவி விலகலை அறிவிக்கப் போகிறார் என்று ஒரு கதை பலமாக அடிபடுகின்றது. என்ன நடக்கப் போகிறதோ ? எல்லாம் சம்பந்தருக்கே வெளிச்சம்.

– பட்சி

நாடாளுமன்ற....

மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று வியாழக்கிழமை காலை சபையில் அறிவித்தார்.
நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தவிசாளராக செயற்படுகின்றார். பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, குழுக்களின் பிரதித் தவிசாளர் இ. அங்கஜன், சபை முதல்வர் தினேஸ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் அதிகாரபூர்வமாக அங்கத்துவத்தைப் பெறுவர். இவர்களுக்கு மேலதிகமாக சமல் ராஜபக்ச, நிமல் ஸ்ரீபால டி சில்வா, பேராசிரியர் ஜி. எல் பீரிஸ், டக்லஸ் தேவானந்தா, டலஸ் அலகப்பெரும, விமல் வீரவன்ச, மகிந்த அமரவீர, வாசுதேவ நாணயக்கார, பிரசன்ன ரணதுங்க, மஹிந்த சமரசிங்க, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், அனுரகுமார திசாநாயக்க, டிலான் பெரேரா, ரிஸாட் பதியூதின், ஆர். எம் ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கனேசன், எம்.ஏ.சுமந்திரன், அலி சப்ரி ரஹீம் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவர். (த-44)

திருமணம்...

தம்மிக்க தசநாயக்கவிடம் கையளித்தார். 'திருமணத்துக்கான ஆகக்குறைந்த வயது' என்ற தலைப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிள்ளைகளினதும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டியது அவசியம் என்று பிரமித்த பண்டார சுட்டிக்காட்டுகின்றார். சிறுவர்கள் சிறுவர்களாகவே நடத்தப்படவேண்டும் என்பதே இந்த யோசனையின் நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், யாரையும் ஓரங்கட்டுவதற்காக இது கொண்டுவரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்த யோசனையின்படி ஆண்,பெண் இரண்டு தரப்பினரும் 18 வயதைப் பூர்த்திசெய்த பின்னரே திருமணம் செய்துகொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் குழந்தை திருமணம் தொடர்பில் நீதிமன்றின் திருமணரத்து தொடர்பாகவும் இந்த யோசனையில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

வீட்டிலிருந்த..

யைச் சேர்ந்தவர். சிலாபம் பொது மருத்துவமனையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதே அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது என்று மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் கபிலா மல்லவராச்சி தெரிவித்தார். அவர் டுபாயிலிருந்து நாடு திரும்பியிருந்தார். வவுனியா, தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் வீட்டில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.
இந்தநிலையில், அவருக்கு நடத்திய பி.சி.ஆர். சோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது தேசிய தொற்று நோயியல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த)

சீருடை வவுச்சருக்கு...

பாடசாலைச் சீருடைக்கான கட்டண அட்டை (வவுச்சர்) செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை செல்லுப்படியாகும் வகையில் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
குறித்த வவுச்சர் இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தது. நாட்டில் நிலவிய கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வவுச்சர் செல்லுப்படியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-இ)

அரசுடன்....

கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.
அவர் தனது உரையில், கடந்த பெப்ரவரி மாதத்தில் கடன்களைச் செலுத்துவதற்கு அனுமதி கோரியிருந்தேன். ஆனால் எதிர்க்கட்சி அதற்கு இடையூறு செய்ததால் தாமதல் ஏற்பட்டது.
2020ஆம் ஆண்டு செப்ரெம்பரிலிருந்து டிசெம்பர் வரையான நான்கு மாதங்களுக்கு அரச செலவுகளை செய்வதற்கு ஆயிரத்து 900 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்கும் அதற்காக ஆயிரத்து 300 பில்லியன் கடன் எல்லையை அங்கீகரிப்பதற்காகவும்தான் இந்த குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த எல்லா குறைநிரப்பு பிரேரணையும் 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின்மூலம் எதிர்காலத்தில் சமர்ப்பிப்போம்.
2019ஆம் ஆண்டு செலுத்தப்படாத பட்டியலைச் செலுத்துவதற்கு பெருமளவு தொகை தேவைப்படுகின்றது. இதன்படி அரசின் செலவு ஓரளவுக்கு முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் எமது வெளிநாட்டு கையிருப்புக்கள் தேவையில்லாத பொருள்களை இறக்குமதி செய்வதற்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பின்னணியில் எமது செலாவணி விழுக்காடு தேவையற்ற விதத்திலே ஏற்ற இறக்கம் கண்டன. இதன் விளைவை இன்று நாம் பார்க்கின்றோம். எவ்வாறாயினும், செலாவணி விழுக்காடை உறுதியான மட்டத்திலே பேணுவதற்கு எங்களால் முடிந்திருக்கின்றது.
எமது உள்நாட்டு தொழில் முனைவோர்கள் கைத்தொழிலாளர்கள் என்று எல்லோரையும் வலுவூட்ட வேண்டியிருக்கின்றது. என்று குறிப்பிட்டுள்ளார். (த)

தனிமையிலிருந்த 60 பேர் திரும்பினர்

கிளிநொச்சி, ஓக. 27
முழங்காவில் தனிப்படுத்தல் மையத்தில் இருந்த 60 பேர் தனிமைப்படுத்தலினை முடித்து இன்று வீடுகளுக்குச் சென்றனர். கிளிநொச்சி முழங்காவில் 651 படைமுகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 60 பேரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்று கடந்த இரண்டாம் திகதி நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்காக இந்த இராணுவ முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர். இந்த 60பேரில் அனைவரும் ஆண்களே. இவர்கள் நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்தவர்கள். ஐந்து இராணுவ பேருந்துகளில் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என உறுதிப்படுத்திய மருத்துவ சான்றிதழ்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. (த-6)

தனது அனுமதியின்றி...

அழைக்க முடியாது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தான தெரிவித்தார். நாடாளுமன்றில் 27/2 கீழ் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு கூறினார்.
" கோப் குழுவின் தலைவராகவிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்திக்கு கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பல்கலைக்கழகம் தொடர்பில் தமக்கு தெரிந்த விடங்களை சமர்ப்பிக்குமாறு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற சிறப்புரிமைகளின் பிரகாரம் கோப் குழுவின் தலைவராக இருந்த ஒருவரை நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசாரணைகளுக்காக அழைக்க முடியுமா? என கேள்வியெழுப்பிருந்தார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், முடியாது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். என்றார். (த-44)

நாடாளுமன்றிலிருந்து விரட்டுங்கள் விக்கியை!

அங்கு இன்றும் சர்ச்சை

கொழும்பு, ஓக. 27
நாடாளுமன்றில் மேற்கொண்ட சத்தியப்பிரமாணத்தை மீறும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள விக்னேஸ்வரனை நாடாளுமன்றிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.
நாடாளுமன்றம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகரின் அறிவிப்பு முடிவடைந்த கையோடு விக்னேஸ்வரன் விவகாரம் சபையில் சூடுபிடித்தது.
ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய சஜித் அணி உறுப்பினரான மனுச நாணயக்கார, "சபாநாயகருக்கு நன்றி தெரிவிக்கும் உரையின்போது இலங்கையின் பூர்வீக மொழி பற்றியும் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாகவும் விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துகளை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு கோரிருந்தேன். இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என கூறப்பட்டது. ஆனால் அவரின் உரை ஹன்சாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது." என சுட்டிக்காட்டி சர்ச்சைக்கு பிள்ளையார்சுழி போட்டார். "ஆளுங்கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது கருத்தை வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது" என சபாநாயகர் சுட்டிக்காட்டினார். அதன் போது, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் சாந்த பண்டார,
"நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து அரசமைப்பைமீறும் விதத்தில் இருந்தால் அது ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றது. எனவே, இவரின் உரையில் உள்ள சர்ச்சைக்குரிய கருத்துகளும் நீக்கப்படவேண்டும்" என வலியுறுத்தினார்.
அதன்பின்னர் கருத்து வெளியிட்ட நளின் பண்டார எம்.பி.,
"பயங்கரவாதத்தை, தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடமாட்டோம் என சபையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்து ஒரு மணிநேரத்துக்குள்ளேயே அதனைமீறும் வகையில் விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டுள்ளார்.
அவரின் உரை இனவாதம் கொண்டது. சபையில் செய்த சத்தியப்பிரமாணத்தை மீறும் வகையில் உள்ளது. எனவே, அவரை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்." என்றார். (த-44)

13ஐ ஒழிப்பதற்கு ஐ.ம.ச ஒத்துழைக்காது

அதன் யாழ். அமைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
13ஐ இல்லாதொழிப்பதற்கோ அல்லது பலத்தைக் குறைப்பதற்கோ எந்தவொரு சந்தர்ப்பத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளாதென ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் உமா சந்திர பிரகாஷ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
19 ஆவது திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான யோசனைகளை அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது. இலங்கையர்களாக நாம் இவற்றிலுள்ள நிறை, குறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சஜித் பிரேமதாச 13 ஆம் திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு துணைபோக மாட்டேன் எனக் குறிப்பிட்டடிருந்தார். அந்த நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இன்றும் இருக்கின்றது. எனவே 13ஐ இல்லாதொழிப்பதற்கோ அல்லது பலத்தைக் குறைப்பதற்கோ எந்தவொரு சந்தர்ப்பத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளாது என்றார். (ப-இ)

பெயரை நீக்குமாறு அழுத்தினார் மங்கள

ஆணைக்குழுவில் முன்னாள் கட்டளை அதிகாரி சாட்சியம்

கொழும்பு, ஓக. 27
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவளித்ததாக கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்தார் என கிரித்தலே இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்ட லெப்டிணன் கேர்ணல் ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.
2015 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர செயற்பட்டபோதே தனக்கு இவ்வாறு அழுத்தம் கொடுத்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
"இம்மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவளித்தவர்கள் என கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்தது.
அவர்கள் இருவரும் தமது நண்பர்கள் எனவும் தாம் பிரித்தானியாவுக்குச் சென்ற காலப்பகுதியில் அவர்களுடன் நல்லுறவைக் பேணி இருந்தேன் எனவும் மங்கள சமரவீர என்னிடம் கூறினார்.
அத்தோடு கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த குறித்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர எனக்கு அழுத்தம் கொடுத்தார்" என்று ஷம்மி குமாரரத்ன சாட்சியமளித்துள்ளார். (ப-இ)

மூடைகள் ஏற்றிச் செல்லும் பேருந்துகள்

பயணிகள் விசனம்

வவுனியா,ஓக.27

வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தில் மரக்கறிகள் மற்றும் பத்திரிகைகள் போன்றன ஏற்றிச்செல்வதால் தாம் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றோம் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி இன்று காலை 6 மணிக்குப் புறப்பட்ட தனியார் பேருந்தின் பின்புறமாகவுள்ள அனைத்து ஆசனத்திலும் மரக்கறி மூடைகள் மற்றும் பத்திரிகைகள் என்பன ஏற்றப்பட்டுள்ளமையால் ஆசனங்கள் இன்றி பயணிகள் நின்றபடியே தங்களது பிரயாணத்தினை தொடர்ந்துள்ளனர்.

வவுனியா மன்னார் தனியார் பேருந்துகளில் இவ்வாறு பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவது வழமையாக இடம்பெற்றுவரும் சம்பவம் எனவும், இவ்விடயம் தொடர்பில் போக்குவரத்து அதிகார சபை யினர் கவனம் செலுத்தி உரிய தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-18)

வீதிப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டவர் மீது தாக்குதல்

வவுனியா, ஓக.27

வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்ட நபர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் வவுனியா நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர் குடும்பஸ்தர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த ஊழியர் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வீதியில் சென்ற வாகனங்களை வழிமறித்து ஒருவழிப்பயணம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதன்போது முச்சக்கரவண்டி செலுத்தி வந்த சாரதி ஒருவர் குறித்த ஊழியரின் கருத்தை உள்வாங்காமல் தனது முச்சக்கரவண்டியைச் செலுத்தியமையால் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது முச்சக்கரவண்டி சாரதி தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தனது நண்பர்களை அழைத்து வீதி திருத்தும் பணியில் ஈடுபட்ட அந்த ஊழியர் மீது கடுமையாக தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-110)

முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு பொதிகள்

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட முன்பள்ளி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கப்படும் என பிரதேசசபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று காரணமாகப் பின்பற்றப்படும் சுகாதார நடைமுறைக்கு அமைய சமைத்த உணவுகளை முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்க முடியாது. இதனால் கடலை, கௌப்பி, பயறு போன்ற சத்துணவுப் பொதியை சபை வழங்கி வைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம் மாதத்துக்கான சத்துணவுப் பொதி சகல முன்பள்ளி மாணவர்களுக்கும் சபையால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-17)

மறுக்கப்பட்ட மனிதங்கள் இசை வெளியீட்டு நிகழ்வு!

முல்லைத்தீவு, ஓக.27

மாற்று வலுவுடையோர் மனங்களின் ஆதங்கங்களை வெளிக்கொண்டு வரும் பாடல் இசை வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

அன்னை திரேசாவின் பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று புதன்கிழமை தாயகக் கலைஞர்களின் உருவாக்கத்தில் உருவான 'மறுக்கப்பட்ட மனிதங்கள்' இசை வெளியீட்டு நிகழ்வு அ.வினோத் தலைமையில் நடைபெற்றுள்ளது. மாற்றுத் திறனாளிகள் வேதனையினை, அவர்களின் தேவையினை உள்ளக்குமுறல்களை வெளிக்கொணரும் பாடல் வரிகளை அ.வினோத் எழுத பாடலுக்கான இசையினை விமல் அவர்களும் பாடலை மதமீரா அவர்களும் பாடியுள்ளார்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தேசபந்து கலைஇளவரசன் மற்றும் வன்னியூர் செந்தூரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கலாலய நாடகக்குழுவின் ஸ்தாபகர் நாடக நடிகர் ஆசிரியர் பொ. உமாகாந்தன், அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பாடசாலை முதல்வர் ச.சசிகுமார், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்துறை முன்னாள் உதவி விரிவுரையாளர் ஜெ.ஜெயப்பிரசாந்தி, அகில இலங்கை கிருபா மக்கள் சேவை அறக்கட்டளை தொழிலதிபர் அ.கிருபாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ந-19)

குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டுள்ளது

மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.27

குற்றச் செயல்கள் பெரியளவில் தற்போது தடுக்கப்பட்டுள்ளது என்று உள்துறை பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் இடர்முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று கடமைகளைப் பொறுபேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் பெரியளவில் பரவியிருந்த திட்டமிட்ட குற்றச் செயல்களைப் போன்று போதைப் பொருள் குற்றங்கள், கப்பம் பெறுதல் மற்றும் பாதாள உலகக்குழு உறுப்பினர்களின் செயற்பாடுகள் என்பன சமூகத்தை பெரியளவில் தவறான வழிகளை நோக்கி கொண்டு சென்றுகொண்டிருந்த நிலையில் தற்போது அவற்றின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளது. இதில் நாங்கள் மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளோம். எதிர்காலத்திலும் இதே போன்ற வெற்றியை பெற்றுக்கொள்வோம்.

எமது நாட்டு மக்களும், எதிர்கால தலைமுறையினரும் சமூகத்தில் மகிழ்ச்சியாகவும், தொந்தரவுகள் இன்றியும் கௌரவமாக வாழக்கூடிய சூழலை உருவாக்க கடமைப்பட்டுள்ளோம்என்றார். (ற-இ)

மட்டக்களப்பு மாவட்ட வை.எம்.சி.எ. நிறுவனத்தால் யு.எஸ்.எயிட் நிறுவன நிதிப் பங்களிப்புடன், கொவிட் 19 வைரஸ் தொற்று தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான கிருமி தொற்றுநீக்கி விசுறும் இயந்திர உபகரணங்கள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பிரிவு திணைக்களத்திற்கு, மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவால் இன்று கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், வை.எம்.சி.எ. நிறுவன பொதுச்செயலாளர் ஜெகன் ஜீவராஜ் மற்றும் வை.எம்.சி.எ நிறுவன உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ந-150)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/81 கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி முதல்வர் ஈசன் தலைமையில் இன்று காலை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதலில் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. (ந-111)

மத்திய அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.27

மத்திய அதிவேக வீதியின் முதல் மீரிகம வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் இன்று ஆரம்ப மாகியுள்ளன. பெருந்தெருக்கள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ இதனைத் தெரிவித்துள்ளார். 36.54 கிலோ மீற்றர் நீளத்தில் இந்தப் பாதை நிர்மாணிக்கப்பட வுள்ளது. ஐந்து வருடங்களின் பின்னர் இந்தப் பகுதியின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ந)

தோப்பூர் வாசிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

திருகோணமலை, ஓக.27

தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 20 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வை.ஜெஸ்மி தலைமையிலான சுகாதாரக் குழுவினரால் இந்தப் பி.சி.ஆர்.பரிசோதனைகள் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிகளவில் சமூக தொடர்புகளைப் பேணுகின்ற சிகை அலங்கார தொழிலாளர்கள், பிரதேச சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், புடவை வியாபாரிகள் உள்ளிட்டோருக்கே இவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ற-40)

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு புதிதாக திருமஞ்சம் அமைப்பதற்கான ஆரம்ப சமய கிரியைகள் கடந்த சனிக்கிழமை ஆவணிச் சதுர்த்தி நாளில் இடம் பெற்றது. ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருமஞ்சத்தை உருவாக்கும் சிற்பக் கலைஞர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ எஸ்.பாலச்சந்திரன், பரிபாலனசபை தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி, செயலாளர் என்.காண்டீபன் மற்றும் சிற்பக் கலைஞர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ந-17)

அமெரிக்கத் தூதுவர் சம்பூர் வருகை

திருகோணமலை, ஓக.27

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா வீ டெப்லீக்ஸ் திருகோணமலை சம்பூர் கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்துக்கு நேற்று வருகை தந்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 93 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம், ஆசிரியர் விடுதி, கழிப்பறை போன்றவற்றின் திறப்புவிழாவுக்கே இவ்வாறு வருகை தந்துள்ளார்.

இந்த நிகழ்வானது பாடசாலை அதிபர் எஸ். பாக்கியஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரினால் குறித்த பாடசாலையின் அதிபர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத் போன்றோருக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் முத்து பண்டா, மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ற-40)

100 அடி மரத்தில் ஏறி பெண் உண்ணாவிரதம்

பலாங்கொட, ஓக.27

பலாங்கொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட பகுதியில் உள்ள 100 அடி மரம் ஒன்றில் ஏறி பெண் ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

பலாங்கொட தயவின்ன ஹதகரிய பிரதேசத்தினைச் சேர்ந்த 37 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

தாம் வசித்து வந்த நிலப்பரப்பினை சட்டபூர்வமாகப் பெற்றுக்கொடுக்குமாறு போரியே இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில், குறித்த நிலப்பரப்பு தொடர்பில் வழக்கு உள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதேச செயலாளர், இந்தப் பெண்ணுக்கு வேறு நிலப்பரப்பு வழங்கக முன்வந்துள்ள போதும் அதனை அவர் ஏற்க மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ந)

இருப்பதோ 30; கேட்பதோ 70!

கொழும்பு, ஓக.27

30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்துள்ள நிலையில் புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 70 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளனர் என பொது சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் விண்ணப்பதாரர்களின் தேவை மற்றும் தூரம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் 70 பேருக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதாயின் அமைச்சு பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு பாதிப்பில்லாது செயற்படுங்கள்

புதிய எம்.பிக்களுக்கு சபாநாயகர் அறிவுரை

கொழும்பு, ஓக.27

மக்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு கொஞ்சமேனும் பாதிப்பு ஏற்படாதவகையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவுரை வழங்கியுள்ளார். ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நாடாளுமன்றக் குழு அறையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளைத் திருத்திக்கொண்டு, மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும். பொதுத்தேர்தலின் மூலம் பல வருடகாலங்களுக்குப் பின்னர் பரிபூரணமான நாடாளுமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி இருக்கும் அனைவரும் கடந்த 5 மாதங்களாக பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்தே நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி வந்துள்ளனர். அதனால் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் தொடர்பாக சிறந்த அனுபவங்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றே நாங்கள் நினைக்கின்றோம். நாட்டில் இது வரை காலமும் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவே மக்கள் பாரிய வெற்றியை எமக்குத் தந்திருக்கின்றனர். விசேடமாக அரசியலமைப்பில் பல முரண்பாடுகளை கடந்த காலங்களில் காணமுடிந்தன. அவை அனைத்தையும் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

அதேபோன்று எதிர்காலத்திலும் அவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படாதவகையில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (வ-இ)

முன்பள்ளிகளில் தொற்று நீக்கம்

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களில் இயங்கும் முன்பள்ளிகள் தொற்று நீக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இப் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி நிலையங்கள் சுகாதார விதிகளுக்கு அமைய, தமது கற்றல் செயற்பாடுகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சுகாதார விதிகளுக்கு அமைய முன்பள்ளி நிலையங்கள் யாவும் இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை தொற்று நீக்கம் செய்யப்படும் என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது. (ந-17)

உத்தியோகத்தர்களுக்கு சிறைகளில் தட்டுப்பாடு

கொழும்பு, ஓக.27

சிறைச்சாலைகளிலுள்ள பல்வேறு பதவி நிலைகளுக்கு உத்தியோகத்தர்கள் தரத்தைச் சேர்ந்த 1500 பேர்கள் வரையில் தட்டுப்பாடு நிலவுகின்றது எனத் தெரியவந்துள்ளது.

அந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்ப 2016 ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தாலும், கடந்த ஆண்டு வரை எந்தவொரு நியமனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் நியமனங்கள் வழங்குவதற்கான செயற்பாடுகள் இரு தடவைகள் முன்னெடுக்கப்பட்டும் இறுதி நேரங்களில் பல்வேறு காரணங்களினால் அவை வழங்கப்படவில்லை. இதனால் பதவி வெற்றிடங்களில் அதிகரிப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சேவையிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களால் ஏற்பட்ட பதவி வெற்றிடங்களுக்குப் புதிதாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையே இந்த நிலைக்குக் காரணம் எனச் சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் இயங்கும் சிறைச்சாலைகளில் மட்டும் 500 வரையிலான வெற்றிடங்கள் நிலவுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-ச)

வவுனியா கோவில்குளம் சிவன் ஆலயத்தில் இன்றும் நாளையும் எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலில் நாளை இடம்பெறவுள்ள அதிசுந்தர பஞ்சதள பஞ்ச கலச நூதன இராஜ கோபுர சகித புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வர்ண பந்தன சமர்ப்பண நவ (9) குண்டக் ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிசேகத்தை முன்னிட்டே இந்த எண்ணெய்க்காப்பு இடம்பெறுகின்றது. இன்று காலை 8.00 மணியளவில் வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பூரண ஒத்துழைப்புடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எண்ணெய் காப்பு நிகழ்வு இடம்பெற்றது. நாளை பிற்பகல் 3.00 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு நிகழ்வில் கலந்து கொள்ளமுடியும் என்பதையும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ற)

ஹெரோய்னுடன் தம்பதியர் கைது!

கொழும்பு, ஓக.27

75 கிராம் ஹெரோய்னுடன் தம்பதி கைதான சம்பவம் பிலியந்தல, சூவாரபொல பகுதியில் இடம்பெற்றுள்ளது. மொரட்டுமுல்ல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய அந்தப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான வீடொன்றைச் சோதனைக்கு உட்படுத்திய போது ஹெரோய்னுடன் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் அந்த வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தனர் எனவும் வீட்டில் இரகசியமாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (வ-இ)

ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டம்: ரயில்வே திணைக்களத்துக்கு பணியாளர்கள்

கொழும்பு, ஓக.27

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் ரயில்வே திணைக்களத்துக்கு புதியவர்களை உள்வாங்குவது தொடர்பில் புதிய யோசனையொன்றை புகையிரத சேவை தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ளது.

அதன்படி, மாதாந்தம் 50 இலட்சம் ரூபா வரை செலவு செய்து தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளைச் சுத்தம் செய்யும் பணியை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேரைக் கொண்டு நிறைவேற்ற இயலும் என்று தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி யோசனை முன்வைத்துள்ளது. அத்தகைய தொழிலாளர்கள் மேற்கொள்ளும் பணியை மேற்பார்வை செய்யவதற்கு வேலையற்ற பட்டதாரிகள் சிலரையும் நியமனம் செய்வதன் மூலம் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவேற்ற இயலும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் புகையிரதத் திணைக்களம் அந்தச் சேவைக்காகச் செலவிடும் மாதாந்தத் தொகையில் 30 இலட்சம் ரூபா வரை மீதப்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ-ச)

அடிப்படை வசதிகளற்ற நிலையில் மட்டு. சாளம்பஞ்சேனை மக்கள்

மட்டக்களப்பு, ஓக.27

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புணாணை மேற்கு மீள்குடியேற்ற கிராமமான சாளம்பஞ்சேனை கிராமத்தில் வாழும் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வருகிறோம் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு வாழும் மக்களுக்கு குடி தண்ணீர் மற்றும் அவர்களின் ஜீவனோபாய தொழில்களான வீட்டுத் தோட்டம் மற்றும் கால்நடை வளர்ப்பு உட்பட அனைத்துத் தேவைகளுக்கும் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகின்றது.

மேலும், இரவு வேளைகளில் கிராமத்தினுள் வரும் யானைகளினால் சில வீடுகள் மற்றும் அவர்களின் உடைமைகள் முற்றாக சேதமாக்கப்படுகின்றன. அத்துடன் வீட்டுத் தோட்டப் பயிர்களும் யானைகளால் அழிக்கப்படுகின்றன.

தமது நிலைமையினைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்த்துத்தருவதுடன், யானை வேலி அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் தமது கிராமத்தை அண்டியுள்ள பகுதியில் கட்டப்படும் மாடுகளை வேறு பகுதிகளில் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-150)

சேவா லங்கா மன்றத்தினால் சுற்றுலாத்துறை வேலைத்திட்டம்

நாசிவந்தீவு கிராமத்தில் ஆரம்பித்து வைப்பு

மட்டக்களப்பு, ஓக.27

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாசிவந்தீவு கிராமத்தில் சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறை வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட பதினொரு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கிலான இச் சமூக சுற்றுலாத் துறை வேலைத் வேலைத் திட்டமானது, அவுஸ்ரேலியா அரசாங்கம் மற்றும் அவுஸ்ரேலியா எஸ்4ஐஜி நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் சேவா லங்கா மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், நாசிவந்தீவு கிராமத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலினை எவ்வாறு ஆற்றில் மேற்கொள்கின்றனர் என்பதனை தோணி மற்றும் படகு மூலம் சென்று ஆற்றில் நேரடியாக பார்வையிட முடியும். அத்துடன் நாசீவந்தீவு ஆற்றில் காணப்படும் கடல்வாழ் உயிரினங்களையும் பார்வையிடுவதுடன், அவற்றை கிராம மக்களோடு சேர்ந்து குறித்த பகுதியில் காணப்படும் தீவில் கிராமிய முறைப்படி சமைத்து உண்ணக்கூடிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனவே இங்கு வருகைதரும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளினால் கிடைக்கும் வருமானத்தைப் பயன்படுத்தி இந்தக் கிராமத்தினை அபிவிருத்தி செய்ய முடியும் என்று சேவா லங்கா மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாதுறை திட்ட இணைப்பாளர் ஏ.எம்.பாஹிம் தெரிவித்துள்ளார். (ந-150)

வனப்பகுதியாக அறிவித்த சாம்பல்தீவு தொடர்பில் கலந்துரையாடல்

திருகோணமலை, ஓக.27

வனத்துறை மற்றும் வன விலங்குத்துறை ஆகியன சாம்பல்தீவு களப்புப் பகுதியில் 360 ஏக்கர் நிலத்தை வனப்பகுதியாக அறிவித்து வர்த்தமானியில் பிரசுரிக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளன. இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று திருகோணமலைக் கச்சேரியில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அசங்க அபயவர்த்தனவுக்கும், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் ச. குகதாசன் ஆகியோருக்கும் இடையே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்கள் பலரின் உறுதிகளை உடைய காணிகளும் இதனுள் உள்ளடங்குகின்றன. இந்தக் காணிகளுக்குள் உரிமையாளர் எந்தவொரு வேலையும் செய்யக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளது. இந்த தடையை நீக்கி தனியார் தத்தம் காணிகளில் தாம் விரும்பும் பணிகளைச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று அரசாங்க அதிபரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற-40)

நாடாளுமன்றில் பார்வையாளர் கலரி மூடல்

கொழும்பு, ஓக.27

மீள அறிவிப்பு வரும்வரையில் நாடாளுமன்றத்தின் பார்வையாளர் கலரி திறக்கப்படுவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாகவும், சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமையவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பார்வையாளர் கலரியை மீண்டும் திறப்பது தொடர்பான திகதி சுகாதாரத் துறையின் ஆலோசனையின்படி எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

இறக்குமதி வாகனங்கள்; கணக்கெடுக்க முடிவு

கொழும்பு, ஓக.27

இலங்கையில் தற்போது விற்பனைக்காக இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் வாகனங்களின் பங்குகள் குறித்து கணக்கெடுப்பு நடத்துவதற்கு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் முடிவுசெய்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்த அளித்த அறிக்கையைச் சரிபார்ப்பதற்காகவே இந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் உள்ளிட்ட மூன்று சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்தக் கணக்கெடுப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

விற்பனையாளர்களுக்கு தற்போதுள்ள வாகன பங்குகளை விரைவில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கணக்கெடுப்பின்படி, தற்போது சந்தையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் பங்கு குறித்த துல்லியமான தரவுகளைக் கண்டுபிடிக்க முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அடுத்த வாரத்துக்குள் இவை தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படும் என்றும், அதிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வாகன விற்பனைத் துறையில் எதிர்காலத் திட்டங்களுக்காக அரசிடம் ஒப்படைக்கப்படும் என்றும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் மேலும் கூறியுள்ளது. (ற-இ)

மட்டக்களப்பில் விசேட கருமபீடம்

மட்டக்களப்பு, ஓக.27

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள விசேட கருமபீடம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவினால் இந்த விசேட கருமபீடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவிக்கின்ற மற்றும் மரணமடைகின்றவர்களின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுகள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலேயே பதிவு செய்யப்படுகின்றன. இதனாலேயே ஏனைய பிரதேச செயலகங்களை விட இந்த செயலகத்தில் நாளொன்றுக்கு அதிகமான பிறப்புப் பதிவுகளும் ஏனைய இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளும் இடம்பெறுகின்றன.

அந்தவகையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மாதாந்தம் பிரசவிக்கின்ற சுமார் 600 தொடக்கம் 1000 வரையான குழந்தைகளின் பிறப்பு பதிவுகள் இந்தச் செயலகத்திலேயே ஆவணப்படுத்தப்படுகின்றது. (ற-46)

5 மாதங்களில் உலக சுற்றுலாத்துறைக்கு 320 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு

நியூயோர்க், ஓக.27

கொரோனா வைரஸ் பரவலால் உலகளாவிய சுற்றுலாத்துறையில் 320 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. கடந்த ஜன வரி மாதம் முதல் மே மாதம் வரையான 5 மாத காலப்பகுதி யில் சுற்றுலாத்துறை இந்த இழப்பைச் சந்தித்துள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோ னியோ குட்ரஸ் தெரிவித்துள் ளார். அவர் மேலும் தெரிவித்

துள்ளதாவது, சீனாவில் ஆரம்ப மான கொரோனாப் பரவல் தற்போது உலகையே அச்சுறுத்தி வருகிறது. பொருளாதாரம், தொழிற்துறை உள்ளிட்ட பல்வேறு கோணங்களி லும் உலக நாடுகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

உலக பொருளாதாரத்தில் எண்ணெய், இராசாயன ஏற்றுமதிக்கு அடுத்தப்படி யாக சுற்றுலாத்துறை அதிக வருமானத்தை வழங்கும் துறையாக காணப்படுகிறது. இவ்வரு டத்தில் சர்வதேசசுற்றுலாத்துறை அதிக பாதிப்பை சந்தித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு: 33 இலட்சத்தை கடந்தது

புதுடில்லி, ஓக.27

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 33 இலட்சத்தைக் கடந்துள்ளது. கொரோனாப் பாதிப்பில் உலகளவில் 2 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்ட தகவலின்படி இந்தியா வில் 33 இலட்சத்து 10 ஆயிரத்து 234 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட் டுள்ளனர். 25 இலட்சத்து 23 ஆயிரத்து 771 பேர் குணமடைந்துள்ளனர், 7 இலட்சத்து 25 ஆயிரத்து 991 பேர் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். இதேவேளை கொரோனா வைர ஸால் உயிரிழந்தோரின் மொத்த எண் ணிக்கை 60 ஆயிரத்து 472 ஆக உயர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

போலியோ நோயிலிருந்து ஆபிரிக்க கண்டம் விடுதலை

ஜெனிவா, ஓக.27

போலியோ நோயிலிருந்து விடுதலை பெற்ற பிராந்தியமாக ஆபிரிக்கக் கண்டத்தை உலக சுகாதார அமைப்பு நேற்று அறிவித்துள்ளது. கடைசியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வடகிழக்கு நைஜீரியாவில் இந்த நோய் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு, வாழ்நாள் முழுவதும் பக்கவாதத்தை ஏற்படுத் துவதிலிருந்து 1.8 மில்லியன் குழந்தைகளைப் பாதுகாத்ததற்கு அரசுகள், நன்கொடையாளர் கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் சமூகங் களின் இடைவிடாத முயற்சிக்கு நன்றிகள் என்று தெரிவித்துள்ளது. போலியோ எனப்ப டும் இளம்பிள்ளை வாதத் தொற்று நோய் குழந்தைகளின் முதுகெலும்பைத் தாக்குவ தோடு குணப்படுத்த முடியாத பக்கவாதத்தை ஏற்படுத்துகிறது. (வ-இ)

1500ற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள்

ஜப்பானில் கண்டுபிடிப்பு

டோக்கியோ, ஓக.27

ஜப்பானின் ஒசாக்காவிலுள்ள உமேடா கல்லறையில் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 1500க்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன என அந்நாட்டு தொல்பொருள் ஆராய்ச் சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு புதைக்கப்பட்ட மக்கள் ஒசாகா கோட்டை நகரத் தைச் சேர்ந்த உள்ளூர்வாசிகளாக இருக்கலாம் என்றும், அவர்களில் பலர் 30 வயதுக்கு உட்பட்ட வர்களாகவோ, குழந்தைகளாகவோ இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எலும்புக் கூடுகளை ஆய்விற்கு உட்படுத்தியபோது சிலரது எலும்புக் கூடுகளின் கை, கால்களில் நோயின் அறிகுறிகள் தென்படுவதால் அக்காலத்தில் கொரோனா போன்ற பெருந்தொற்று ஏதேனும் ஏற்பட்டிருக்க வாய்ப்புள் ளது எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

51 பேரை கொன்றவருக்கு ஆயுள் தண்டனை

வெலிங்டன், ஓக.27

நியூஸிலாந்து கிறிஸ்ட்சேர்ச் மசூதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு 51 பேரைக் கொலை செய்த ஆயுததா ரிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது. 29 வயதான ஆஸ்திரேலிய பிரஜை பிரெண்டன் ரறன்ட், பிணை யில் வெளிவர இயலாதவாறு ஆயுள் முழுவதும் சிறைவாசம் அனுபவிக்கும் வகையில் நியூஸிலாந்து நீதிமன் றத்தினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட் டுள்ளது. (வ)

ஆப்கான் வெள்ளம்; 100பேர் சாவு

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 100 பேர் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். ஆப்கானிஸ்தானின் பர்வான் மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெளளத்தில் கிட்டத்தட்ட 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. வெள்ளத்தி னால் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டின் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. வெள்ளத்தில் சிக்குண்ட மேலும் பலரைத் தேடி மீட்பு பணியாளர்கள் ஈடுபட் டுள்ளதுடன் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிகக்கூ டும் எனவும் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (வ)

அப்பாவாகப் போகிறார் கப்டன் விராட் கோலி

மகிழ்ச்சியில் ரசிகர்கள்

இந்திய அணியின் 'ரன் மெஷின்' என ரசிகர்களால் அழைக்கப்படும் கப்டன் விராட் கோலியும், நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த 2017ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டனர்.

இவர்கள் எப்பொழுது குழந்தை பெற்றுக்கொள்வார்கள் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர்.

இந்நிலையில் "இப்போது நாங்கள் மூன்று பேர்" என்று விராட் கோலி அனுஷ்கா சர்மா கர்ப்பிணியாக உள்ளப் புகைப்படத்தை வெளியிட்டு மகிழ்ச்சியுடன் உலகுக்கு அறிவித்திருக்கிறார்.

அனுஷ்கா சர்மாவும் தனது ட்விட்டர் பக்கத்தில் விராட் பகிர்ந்த அதே படத்தைப் பகிர்ந்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். இதனால் ரசிகர்கள் அவர்களுக்கு வாழ்த்து மழை பொழிந்து வருகின்றனர்.

இங்கிலாந்து வாகை

லண்டன், ஓக.27

இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கு இடை யிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் சமனிலையில் முடிந்தது. மூன்று ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து 1 : 0 என்ற கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தித் தொடரைக் கைப்பற்றியது.

இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி சமனிலையில் முடிந்தது.

மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் சவுத்தாம்ப்டன் நகரில் நடைபெற்றது. நாணயச் சுழற்றியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 8 இலக்குகள் இழப்புக்கு 583 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக கிராவ்லி இரட்டைச் சதம் அடித்து 267 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். பட்லர் 152 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடத் தொடங்கியது. ஆனால் இங்கிலாந்து வீரர்களின் சிறப்பான பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அனைத்து இலக்குகளையும் இழந்து பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்சில் 273 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

அந்த அணியின் அசார் அலி அதிக பட்சமாக 141 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜேம்ஸ் அண்டர்சன் அதிகபட்சமாக 5 இலக்குகளை வீழ்த்தினார். இங்கிலாந்தை விட 310 ஓட்டங்கள்கள் பின்தங்கிய நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி "பலோ ஒன்" நிலைக்குத் தள்ளப்பட்டது. அதையடுத்துப் பாகிஸ்தான் அணி ஆட்டத்தின் நான்காம் நாள் தனது 2வது இன்னிங்ஸை ஆடத்தொடங்கியது. 56 பந்துப் பரிமாற்றங்களுக்கு பாகிஸ்தான் அணி 2 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் 4ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அந்த அணியின் அசார் அலி 29 ஓட்டங்களுடனும் பாபர் அசாம் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆட்டத்தின் கடைசி நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பாகிஸ்தான் வீரர்கள் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். அவர்களது விக்கெட்டுகளை வீழ்த்த இங்கிலாந்து அணி கடுமையான முயற்சி மேற்கொண்டது.

ஆனால் பாகிஸ்தான் அணி 4 இலக்குகள் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் போட்டியின் கடைசி நாளான 5ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் 3ஆவது டெஸ்ட் ஆட்டம் சமனிலையில் முடிந்தது. பாகிஸ்தான் அணியில் பாபர் அசாம் 63 ஓட்டங்களுடனும் பவாத் ஆலம் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இங்கிலாந்து வீரர் அண்டர்சன் 2 இலக்குகளை வீழ்த்தி டெஸ்ட் வரலாற்றில் 600 இலக்குகளை வீழ்த்திய முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை பெற்றார்.

இந்தப் போட்டி சமனிலையில் முடிந்தாலும் முதல் போட்டியில் பெற்ற வெற்றி யின் மூலம் 1:0 என்ற புள்ளிகள் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது. ஆட்டநாயகன் விருது இங்கிலாந்து வீரர் கிராவ்லிக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகன் விருது இங்கிலாந்து வீரர் பட்லருக்கும், பாகிஸ்தான் வீரர் முகமது ரிஷ்வானுக்கும் வழங்கப்பட்டது. (எ)

கால்இறுதிக்குள் ஜோகோவிச் வெளியேறினார் வில்லியம்ஸ்

நியூயோர்க், ஓக.27

சின்சினாட்டி பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் கால்இறுதிக்கு முன்னேறினார். செரீனா வில்லியம்ஸ் 3 ஆவது சுற்றுடன் வெளியேறினார். சின்சினாட்டி பகிரங்க சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதன்மை வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) 62, 64 என்ற நேர் செட் கணக்கில் டெனிஸ் சான்ட்கிரினை (அமெரிக்கா) தோற்கடித்து கால்இறுதியை எட்டினார். ஜோகோவிச் இந்தச் சீசனில் தொடர்ச்சியாக பெற்ற 20 ஆவது வெற்றி இதுவாகும்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 30 ஆவது இடத்தில் இருக்கும் மிலோஸ் ராவ்னிக் (கனடா) 6:2, 6:2 என்ற நேர் செட் கணக்கில் முன்னாள் முதன்மை வீரரான ஆன்டி முர்ரேவை (இங்கிலாந்து) வெளியேற்றி 5 ஆவது முறையாக கால்இறுதிக்குள் நுழைந்தார். முர்ரேவிடம் இதற்கு முன்பு 8 முறை தோல்வி அடைந்த ராவ்னிக் அவருக்கு எதிராக பதிவு செய்த முதல் வெற்றி இதுவாகும். சிட்சிபாஸ் (கிரீஸ்), டேனில் மெட்விடேவ் (ரஷ்யா), கிராஜினோவிச் (செர்பியா), பாவ்டிஸ்டா அகுட் (ஸ்பெயின்) ஆகியோரும் கால்இறுதியை உறுதி செய்தனர்.

பெண்கள் ஒற்றையர் 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 2 முறை சாம்பியனும், முன்னாள் முதன்மை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 7:5, 6:7 (57), 1:6 என்ற செட் கணக்கில் கிரீஸ் மங்கை மரியா சக்காரியிடம் அதிர்ச்சிகரமாக தோற்று நடையை கட்டினார். 2 மணி 17 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் முதல் செட்டை வென்று 2 ஆவது செட்டில் 5:3 என்ற கணக்கில் முன்னிலை வகித்த செரீனா தனது தவறான ஷொட்களால் சரிவைச் சந்தித்ததுடன், டைபிரேக்கரில் 4:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றும் செட்டை கைப்பற்றும் வாய்ப்பைத் தவறவிட்டார். கடைசி செட்டில் கால் வலியை சமாளித்து ஆடிய செரீனா எதிராளிக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரண் அடைந்தார். (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 27.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.